

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | அக்டோபர் 24, 2019 | புரட்சி 18 | முழக்கம் 41 | விலை: ரூ.3.00

# மாநிலங்களுக்கான நிதி உரிமை: நடுவண் ஆட்சி பறிக்கிறது

பாஜக தலைமையிலான மத்திய அரசு ‘ஒரே நாடு - ஒரே சந்தை - ஒரே வரி’ என்பதை படிப்படியாக செயல்படுத்தியது போலவே, ‘ஒரே நாடு - ஒரே ஆட்சி’ என்ற நிலைக்கும் திட்டமிடுகிறதோ என்று தோன்றுகிறது. அதாவது, மத்திய அரசின் நடவடிக்கைகள் அனைத்துமே மக்கள் சார்ந்த அத்தனை விஷயங்களையும் அதன் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதாகவே இருக்கின்றன.

இதன் மூலம் மாநில அரசுகளின் அதிகாரங்களை நீர்த்துப் போக திட்டமிடுகிறது. மக்களுக்குத் தேவையான அனைத்தும் மத்திய அரசு நினைத்தால்தான் முடியும் என்று நம்பவைக்கும் வேலைகள் தீவிரமாக நடக்கின்றன. இந்தியா கூட்டுறவு- கூட்டாட்சி தத்துவத்தின் கீழ் இயங்கிவருகிறது. ஒவ்வொரு மாநிலமும் கலாச்சாரம், சந்தை, மக்கள் தொகை என தனித்துவமாக விளங்கிவருகின்றன.

அந்தந்த மாநிலத்துக்குத் தேவையானதை மாநில அரசுகள்தான் நிர்வகிக்கவும் தீர்மானிக்கவும் முடியும். அதுதான் சரியானதும் கூட. ஆனால், எல்லா வற்றையும் மத்தியில் இருந்தே கட்டுப்படுத்தவும் செயல்படுத்தவும் அரசு திட்டமிடுகிறது. கடந்த ஜூலை மாதம் மத்திய அரசு 15ஆவது நிதிக்குழுவுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள குறிப்பு விதிமுறை களுடன் (Terms of Reference - TOR) கூடுதலாக ஒரு விதிமுறையினை வழங்கியுள்ளது.

அது மாநிலங்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள 42 சதவீத நிதி நிலையை மேலும் குறைக்கும் நடவடிக்கையாகும். ஏற்கெனவே வழங்கப்பட்ட குறிப்பு விதிமுறைகளே தமிழகம் உள்ளிட்ட அனைத்து தென் மாநிலங்களை வெகுவாகப் பாதிக்கும் என்பதால் அவை கடுமையாக எதிர்க்கப்பட்டன. இப்போது சேர்க்கப்பட்டுள்ள கூடுதல் குறிப்பு விதிமுறை மாநிலங்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள 42 சதவீதத்தை மேலும் குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கூடுதல் விதிமுறை வெளிநாட்டு, உள்நாட்டு பாதுகாப்புக்காக ஒரு நிரந்தர நிதியினை (non lapsable fund) உருவாக்க வேண்டும் என்று நிதிக்குழுவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. அதாவது மாநிலங் களுக்கான 42% நிதியினை ஒதுக்குவதற்கு முன்பே, பாதுகாப்புக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் விளைவு மாநிலங்களுக்கான நிதி வெகுவாக குறைக்கப்படும். நிதிக்குழு தன் அறிக்கையினை சமர்ப்பிக்கவிருக்கும் இந்த கடைசி நேரத்தில், அதுவும் மாநிலங்களை கலந்தாலோசிக்காமல் மத்திய அரசின் இந்த நடவடிக்கை பல எதிர்ப்புகளை உருவாக்கி யுள்ளது. இதற்கான பின்னணியைப் பார்ப்போம்.

### நிதிக் குழுவின் விதிமுறை

ஒய்.வி.ரெட்டியின் தலைமையிலான 14-ம் நிதிக்குழுவின் காலம் (2015-20) முழுமையடைவதால், என்.கே.சிங் தலைமையிலான 15ஆவது நிதிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இது அடுத்த ஐந்தாண்டு களுக்கான (2020-25) பரிந்துரைகளை வழங்கும். அதற்காக வழங்கப்பட்ட குறிப்பு விதிமுறைகள், முக்கியமாக நிதி பகிர்வுக்கு 2011 மக்கள்தொகையை பயன்படுத்துவதை, மக்கள் தொகையினை பெருமளவு கட்டுப்படுத்தியுள்ள தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்களில் பெரும் எதிர்ப்பலைகளை உருவாக்கியது. இதைவிட, மாநிலங்களுக்கான நிதியை மேலும் குறைக்கக்கூடிய மற்ற குறிப்பு விதிகளும் உள்ளன.

முதலில், பிரிவு 275-ன் படி, மாநிலங்களுக்கு கொடுக்கப்படும் வருவாய் பற்றாக்குறை நிதி உதவிகளை இனிமேல் கொடுக்க வேண்டுமா என்று நிதிக்குழுவை ஆய்வு செய்ய மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. இந்த உதவி என்பது கடந்த அனைத்து நிதிக் குழுக்களின் அணுகுமுறையில் ஒருங்கிணைந்து ஏற்றுக் கொண்ட ஒன்று. இதை நிறுத்த பரிந்துரைப்பது சட்ட அங்கீகாரம் பெற்ற நிதிக் குழு உரிமைகளில் மத்திய அரசு தலையிட்டு ஆணையிடுவதற்கு சமமானது.

அடுத்து, மத்திய நிதியில், “புதிய இந்தியா 2022” கீழுள்ள தேசிய வளர்ச்சி திட்டங்களின் அவசியத்தை கவனத்தில் கொண்டு, 14ஆம் நிதிக்குழு உயர்த்தி வழங்கிய நிதி பகிர்வை மறுஆய்வு செய்ய பரிந்துரைத் துள்ளது. முந்தைய நிதிக் குழுக்களின் பரிந்துரைகளை அதற்குப் பின்வரும் நிதிக்குழு இதுவரை மறு ஆய்வு செய்ததில்லை. காரணம் நிதிக்குழு நடுநிலையான, சட்டபூர்வ நிறுவனம், அதன் பரிந்துரைகள் நீதிமன்ற தீர்ப்புகளுக்கு இணையானவை.

எல்லாவற்றுக்கும் மேலாக, மத்திய அரசின் முதன்மை திட்டங்களை செயல்படுத்துவது, மாநிலங்களின் “கவர்ச்சித் திட்டங்களுக்கான (Populist measures)” செலவுகளை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் மாநிலங்களின் செயல்திறன் அடிப்படையில் ஊக்கங்களை நிதிக்குழு முன்மொழிய மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. ஒரு திட்டத்தை ‘கவர்ச்சி யானதா’ இல்லையா என்று யார் தீர்மானிப்பது? நிச்சயமாக, மத்திய அரசல்ல. இதை அந்தந்த மாநிலங்கள்தான் முடிவு செய்யமுடியும். மேலும் மாநில திட்டங்கள் ‘கவர்ச்சியானவை’, மத்திய திட்டங்கள் ‘சிறப்பானவை’ அல்லது ‘கவர்ச்சி யற்றவை’ என்றால் அது கேலிக்கூத்தாகும்.

### மத்திய அரசின் அதிகாரக் குவிப்பு

பாஜக அரசு பதவியேற்றதிலிருந்து “கூட்டுறவு- கூட்டாட்சி” என்று மேடையில் பேசிவிட்டு, மாநிலங்களின் அதிகாரங்களை நிதியாதாரங்களை சுரண்டும் வண்ணம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்து. மத்திய வருவாயில் 32 சதவீதமாக இருந்த மாநிலங்களுக்கான பகிர்வினை 14ஆவது நிதிக்குழு 42 சதவீதமாக உயர்த்தியது. இதை மத்திய அரசு ஏதோ தாங்களே உயர்த்திக் கொடுத்ததுபோல சொல்லிக் கொண்டுள்ளது. முதலில் இது மத்திய அரசு கொடுப்பதல்ல; நிதிக் குழு வழங்கியது. மேலும் இது 10 சதவீத உயர்வு கிடையாது.

திட்டக்குழு மூடப்பட்டுவிட்டதால், அது வழங்கி வந்த பல்வேறு திட்டங்களுக்கான நிதியுதவிகள் மத்திய அரசின் ஒட்டுமொத்த வருவாயில் 5.5 சதவீதம் ஆகும். மேலும் துறைவாரியான உதவிகள் 1.5 - 2 சதவீதம். இவையிரண்டையும் இணைத்து இப்போது நிதிக்குழு வழங்குகின்றது.

ஆக, மீதமுள்ள 3 சதவீதம் மட்டுமே 14 வது நிதிக்குழு உயர்த்தி வழங்கியது. மத்திய அரசு இதை ஏற்றுகொள்ள முடியாததால், மாநிலங்களுக்கான 42 சதவீத பங்கை மறைமுகமாக குறைக்கும் நடவடிக்கை களில் இறங்கியுள்ளது. முதலில் திட்டத்துக்கான மாநிலப் பங்களிப்பு 10-25% என்றிருந்ததை, 40% உயர்த்தியது. பிறகு மத்திய அரசு எந்த ஒரு புதிய வரியினையும் செஸ், சர்சார்ஜ் என்று வசூல் செய்ய தொடங்கியது.

காரணம் செஸ் சர்சார்ஜை மாநிலங்களோடு பகிரத் தேவையில்லை. எனவே மத்திய அரசின் வருவாயிலிருந்து தொடர்ந்து உயர்த்தி, 2016-17-ல் 15 சதவீதத்தை (ரூ.2.55 லட்சம் கோடி) மத்திய அரசு எடுத்துக் கொண்டது. விளைவு மாநில அரசுகளுக்கு மத்திய அரசின் மொத்த வருவாயில் கிடைக்க வேண்டிய நியாயமான 42 சதவீத வருவாய் குறைந்து, 2016-17இல் மாநிலங்கள் பெற்றது வெறும் 35.4 சதவீதம் மட்டுமே.

அண்மையில் நிதியமைச்சர் நிறுவன வரிகளைக் குறைக்கும் அறிவிப்பை வெளியிட்டார். இதனால், மத்திய அரசின் இழப்பு 52 சதவீதம் மட்டுமே. நிறுவன வரி குறைப்பால் ஏற்படக் கூடிய வரி இழப்பு ரூ.1.45 லட்சம் கோடி ரூபாய். ஏற்கனவே ஏற்றுமதியை ஊக்குவிக்க வழங்கப்பட்ட வரிச் சலுகைகள் ரூ.45 ஆயிரம் கோடி ரூபாய். இவையிரண்டும் சேர்ந்து ஏற்படக்கூடிய ரூ. 1.90 லட்சம் கோடி வரியிழப்பில் மாநிலங்களுக்கு ஏற்பட்டுள்ள வரி இழப்பு ரூ.85,000 கோடி (42%) ஆகும்.

### தொடரும் நிதிச் சுரண்டல்

இதன் தொடர்ச்சிதான், பாதுகாப்புக்கான “நிரந்தர நிதி” உருவாக்கம். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் ஆன பொறுப்புகளை அரசியல் அமைப்புச்சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் மாநில பட்டியல், மத்திய பட்டியல் என்ற இரண்டிலும் தனித் தனியாகப் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. இரண்டு அரசுக்கும் பொதுவான துறைகள் பொதுப்பட்டியலில் உள்ளன. உள்நாட்டு, வெளிநாட்டு பாதுகாப்பு இரண்டுமே மத்திய பட்டியலிலுள்ள மத்திய அரசின் தலையாய அடிப்படை பொறுப்புகள். இதற்கு மத்திய அரசுதான் இதுவரை செலவு செய்து வந்தது.

இந்த வருட பட்ஜெட்டில் மத்திய அரசின் உயர்ந்தபட்ச செலவான கடனுக்கு செலுத்தும் வட்டிக்குப்பிறகு (ரூ.6.6 லட்சம் கோடி), அடுத்த அதிகபட்ச செலவு உள்நாட்டு (ரூ.71,714 கோடி) வெளிநாட்டு (ரூ.4,31,011 கோடி) பாதுகாப்புக்காக செய்யப்படும் ரூபாய் ரூ.5.2 லட்சம் கோடி. இதற்காக, மத்திய அரசு வேண்டுவதுபோல், மாநிலங்களுக்கான 4 % நிதியினை பகிர்வதற்கு முன்பே ரூ. 5.02 லட்சம் கோடியினை நிதிக்குழு ஒதுக்குமேயானால், இதில் மாநிலங்கள் 42%, அதாவது ரூ. 2.11 லட்சம் கோடியினை இழக்க நேரிடும்.

மேலே குறிப்பிட்ட இழப்புகள் அனைத்து மாநிலங்களும் சந்திக்கவிருக்கும் இழப்புகள். இதை நிதிக் குழு ஏற்கக் கூடாது. மத்திய பட்டியலிலுள்ள பொறுப்புகளுக்கு மத்திய அரசுதான் செலவு செய்ய வேண்டும். மாறாக, நிதிக் குழு இந்த பரிந்துரைகளை ஏற்குமேயானால், மாநிலங்கள் பெரும் இழப்புகளை சந்திக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும். ●

## டிசம்பர் 15 – கோவையில் நீலச் சட்டைப் பேரணி

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பில், புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளை முன்வைத்து, எதிர்வரும் 2019 டிசம்பர் 15 ஞாயிறு அன்று கோவை மாநகரில் நீலச்சட்டைப் பேரணியும், ஜாதி ஒழிப்பு மாநாடும் நடத்துவதென 20.10.2019 ஞாயிறு அன்று திருச்சியில் நடைபெற்ற கூட்டமைப்பின் பொதுக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கழகத் தோழர்களும், ஜாதி ஒழிப்பில் அக்கறையுள்ள அனைத்துத் தரப்பினரும், நீலச் சட்டையோடு பேரணியிலும் மாநாட்டிலும் மிகப் பெரிய எண்ணிக்கையில் கலந்து கொண்டு, ஜாதி ஒழிப்புக்கு வலுசேர்க்க, உடனே திட்டமிடுமாறு உரிமையுடன் வலியுறுத்துகிறோம்.

**கொளத்தூர் மணி**
தலைவர்
திராவிடர் விடுதலைக் கழகம்

# டெல்லியில் ஒரு வாரம் யாகமாம்

# இந்திய கலாச்சாரம் வேத கலாச்சாரமாம்

*புதுடில்லியில் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிஷத் உள்ளிட்ட அமைப்புகள் ஒருங்கிணைந்து, அக்.9 முதல் 'சதுர்வேதா சாவர்க்கர் மகாயக்ஞா' என்ற யாகம் நடத்தியுள்ளனர். நான்கு வேதங்களைப் பரப்புவதற்கு இந்திய நாகரிகம் வேத நாகரிகமே என்பதை உணர்த்தவும், வீட்டு நிகழ்வுகளில் வேத சடங்குகளைப் பின்பற்ற வைக்கவும் இந்த யாகம் நடத்தப்படுவதாக விசுவ இந்து பரிஷத் அறிவித்துள்ளது. மத்திய அமைச்சர் இதில் பங்கேற்றுள்ளார்.*

ஆர்.எஸ்.எஸ். என்ற பாரம்பரிய அமைப்பு, வேதகலாச்சார அடிப்படையிலான இந்து தேசத்தை உருவாக்க வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

பெண்களை உறுப்பினராக சேர்க்க ஆர்.எஸ்.எஸ். மறுத்து வருவதோடு அதன் துணை அமைப்புகள் எல்லாவற்றுக்கும் சமஸ்கிருதப் பெயரையே சூட்டியுள்ளது.

1939ஆம் ஆண்டு வரை ஆரிய நாட்டை வணங்குகிறோம் என்று இந்தியிலும், மராத்தியிலும், பிரார்த்தனை செய்து வந்த ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் பிறகு இதை பார்ப்பனர்களின் "தெய்வீக மொழி"யான சமஸ்கிருதத்தில் மாற்றி அமைத்துக் கொண்டார்கள்! தங்களின் சுயரூபத்தை உலகுக்கு அடையாளம் காட்டிய அந்தப் பாடல் வரிகளை மாற்றி அமைத்துக் கொண்டார்கள்.

ஆர்.எஸ்.எஸ். சட்ட திட்டங்கள் அவர்களின் சமஸ்கிருத வெறித்தனத்தைப் பட்டாங்கமாகப் படம் பிடித்துக் காட்டிவிடுகிறது!

ஆர்.எஸ்.எஸ். சட்டதிட்டங்களில் 8ஆவது பிரிவில் ஆர்.எஸ்.எஸ்.அமைப்பில் உள்ள பிரிவுகள் என்ன என்பது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது! அத்தனையும் சமஸ்கிருதப் பெயர்கள்; இந்தியா முழுமைக்கும் அது எந்த மொழி பேசும் மாநிலமாக இருந்தாலும் அந்த அமைப்புகள் இந்த சமஸ்கிருத மொழியிலேதான் அழைக்கப்பட வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ். சட்ட திட்டங்களின் 8ஆவது விதியில் கூறப்பட்டிருக்கும் பிரிவுகளின் பெயர்கள் என்ன?

"பிராண்ட்" - மண்டலம்

"விபாக்" - மண்டலத்தில் ஒரு பகுதி

"பிராந்திய கேந்திரா" - மண்டலத் தலைமையகம்

"ஜில்லா" - மாவட்ட அமைப்பு

"ஷாகர்" - நகர அமைப்பு

"மண்டல்" - கிராம அமைப்பு

சட்டத் திட்டத்தின் 11ஆவது பிரிவு ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் உயர் அதிகாரக் குழு உறுப்பினர்கள், உயர் அமைப்புகள் பற்றி எடுத்துச் சொல்கிறது.

தலைவர்கள், பல்வேறு உயர் மட்டப் பிரிவுகளின் பெயர் பட்டியல் இது.

1. "சர் சங் சலாக்" (இவர்தான் அமைப்பின் தலைவர்)
2. "சர் கார்ய வஹா"
3. கேந்திரிய கார்ய காரி மண்டல்
4. அகில பாரதீய பிரதிநிதி சபா
5. பிராந்த், விபாக், ஜில்லா மற்றும் சங்சலக்குகள்
6. பிரச்சாரக்
7. பிராந்திய பிரதிநிதி சபா

ஆர்.எஸ்.எஸ்.ஸைத் துவக்கிய ஹெட்கேவருக்குப் பெயர் - அத்ய சர்சங்சலக். (ஆதாரம் விதி 12)

14 ஆவது விதியில் "கேந்திர கார்யகாரி மண்டல்" என்ற அமைப்பில் யார் யார் அங்கம் வகிப்பார்கள் என்று கீழே விவரிக்கப்பட்டிருக்கிறது.

அவைகள் இதோ:

1. சர் கார்ய வஹா
2. ஷா சர் கார்ய வஹா
3. அஹில் பாரதீய ஷிரிக் ஷிக்கான் பிராமுக்
4. அஹில் பாரதீய பவுதீய பவுதிக் ஷிக்கான் பிராமுக்
5. அஹில் பாரதீய பிரச்சார் பிராமுக்

உறுப்பினர்களுக்கு தரப்படும் பயிற்சிவகுப்புக்குப் பெயர் "அதிகாரி ஷிக்ஷன்வர்கா" இவர்கள் - நடத்தும் நிகழ்ச்சிகளுக்குப் பெயர் "வியாஸ் பூர்ணிமா" பொருளாளருக்குப் பெயர் நிதி பிரமுக் - தினசரி நடத்தும் பயிற்சிக்குப் பெயர் "ஷாக", "சமஸ்கார்."

வாத்ய இசையை அமைத்துக் கொண்டு முன்னே போவதற்குப் பெயர் "கோஷ்". அணிவகுப்பு ஊர்வலத்துக்குப் பெயர் "பாதஞ்சலன்".

பிறப்பிக்கின்ற கட்டளைக்குப் பெயர் "ஏகச", "சப்பத" முதல் நபராக வருகின்றவர்களை அழைக்கின்ற பெயர் "அக்ரே சரோராக."

குழந்தைகள் மாநாட்டுக்குப் பெயர் "சிசு சங்".

ஏன் இந்த அமைப்புக்கே பெயர் "இராஷ்டிரிய சுயம் சேவக் சங்க்."

தலையைச் சுற்றுகிறதா தோழர்களே! இந்தக் கூச்சல் தமிழகத்தில் கேட்கலாமா?

இப்படி எல்லாவற்றிலும் சமஸ்கிருதமயமாகிக் கிடக்கும் இந்த அமைப்பு பார்ப்பனீயத்தின் கலாச்சாரப் பாதுகாப்பு என்பது அல்லாமல் வேறு என்ன?

இவைகள் எல்லாவற்றையும் விட ஆர்.எஸ்.எஸ். கொள்கைப் பிரகடனமே பார்ப்பனீய சமஸ்கிருத வெறியைத் தெளிவாகப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். சட்ட திட்டங்களில் "விதிகளும் ஒழுங்கு முறைகளும்" என்ற தலைப்பில் மூன்றாவது பிரிவு கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

*"The aims and objects of Sangh are to weld together the diverse groups within Hindu Samaj and to revitalise and rejuvenate the same on the basis of its Dharma and Sanskrit, that it may achieve an all sided development of the Bharathvarsha."*

"இந்து சமாஜத்தில் பல்வேறு வகையில் பிரிந்து கிடக்கும் குழுக்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு எழுச்சி ஊட்டி இளமை இரத்தம் பாயச் செய்ய வேண்டும். இந்து தர்மம், மற்றும் சமஸ்கிருத அடிப்படையில் இது செய்யப்பட வேண்டும். இதன் மூலம் பாரதத்தின் எல்லா துறைகளிலும் வளர்ச்சிப் பெற முடியும். இதுதான் இந்த அமைப்பின் நோக்கமும் கொள்கையும் ஆகும்."

இந்த கொள்கையை அரசு அதிகாரத்தின் வழியாக முன்னெடுப்பதற்கே இந்த யாகம் நடக்கிறது! ●

**மதிப்புரை**

## தன் வரலாறு மட்டுமல்ல; இயக்க வரலாற்றையும் பேசும் நூல்




கொங்கு மண்டலத்தில் திராவிட இயக்கத்தை வளர்த்த தூண்களில் ஒருவரான மு. கண்ணப்பன் வரலாறு நூலாக வெளி வந்திருக்கிறது. 39 தலைப்புகளில் ஏராளமான தகவல்களைத் திரட்டி சுவைபட எழுதியிருக்கிறார், நூலாசிரியர் வழக்கறிஞர் ஒ. சுந்தரம்.

மு. கண்ணப்பன், இயக்கத்தில் மாணவப் பருவத்திலே இணைத்துக் கொண்டு 23 வயதிலேயே ஊராட்சி மன்றத் தலைவராகி, 1953லேயே இராஜாஜியின் குலக்கல்வித் திட்டத்தை மாணவர்களைத் திரட்டிப் போராடி பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

1956ஆம் ஆண்டு திருச்சியில் கூடிய தி.மு.க. இரண்டாவது மாநில மாநாட்டில் பங்கேற்றதோடு மட்டுமின்றி, 'தி.மு.க. தேர்தல் அரசியலில் போட்டியிட வேண்டுமா?' என்று நடத்திய வாக்கெடுப்பில், போட்டியிடக் கூடாது என்று வாக்களித்த 4203 தோழர்களில் மு. கண்ணப்பனும் ஒருவர். 'ஓட்டுக்காக இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும்' என்று, தான் கருதியதாக மு. கண்ணப்பன் கூறுகிறார்.

1962இல் அண்ணா அறிவித்த விலைவாசி உயர்வு எதிர்ப்புக்கான மறியலில் பங்கேற்று, 4 மாத கடுங்காவல் சிறைத் தண்டனை பெற்றவர். நீதிமன்றம் வரும்போதெல்லாம் கைகளில் விலங்கு பூட்டியே காவல்துறை அழைத்து வந்திருக்கிறது. கிரிமினல் கைதியாகவே சிறையில் நடத்தப்பட்டவர். தான் மிகவும் நேசித்த தந்தையார் மரணத்தின்போது உறவினர்கள் கட்டாயப்படுத்திய நிலையிலும் மொட்டை அடித்து, மதச் சடங்குகளை செய்ய மறுத்திருக்கிறார்.

1965ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. கைப்பற்றிய ஒரே ஊராட்சி ஒன்றியம் பொள்ளாச்சி. காங்கிரசிடமிருந்து கைப்பற்றினார் மு. கண்ணப்பன். வளர்ச்சித் திட்டங்களுக்கு போதுமான நிதி ஒதுக்க மறுத்தபோது பதவியைத் துறக்கவும் தயாரானார்.

1967இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது சட்டமன்ற உறுப்பினரான மு. கண்ணப்பன், தமிழக அரசின் சின்னத்தில் இடம் பெற்றுள்ள 'சத்யமேவ ஜயதே' என்ற இந்தி வார்த்தையையும், 'கவர்ன்மென்ட்' என்ற ஆங்கில சொல்லையும் நீக்கி, தமிழில் மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அண்ணாவுக்கும் இதே சிந்தனை இருந்ததால் 'வாய்மையே வெல்லும்' என்று தமிழக அரசின் இலச்சினையை மாற்றியமைத்தார், அண்ணா.

1971ஆம் ஆண்டு கலைஞர் அமைச்சரவையில் அறநிலையத் துறை அமைச்சராக இருந்தபோது நிகழ்த்திய வரலாற்று சாதனை - கோயில்களில் தமிழ் வழிபாட்டு முறையைக் கொண்டு வந்ததாகும். சைவ மடாதிபதிகள் கூட்டம் ஒன்றில் இந்தக் கோரிக்கை வைத்தபோது பெரியார் - அண்ணாவின் கொள்கை உணர்வில் ஊன்றிப் போனதால் அதே கூட்டத்தில் ஆகஸ்டு 15 முதல் தமிழ் வழிபாட்டு முறையை அரசு அமுல்படுத்தும் என்று, முதலமைச்சரைக்கூட கலந்து பேச வேண்டும் என்று கருதிப் பார்க்காது, இயல்பாகவே அறிவித்திருக்கிறார். ஏடுகளில் அது பெரிய செய்தியானவுடன்தான் தனது அறிவிப்பு அவ்வளவு முக்கியமானது என்பதே தனக்கு புரிந்தது என்று கூறும் மு. கண்ணப்பன், முதல்வர் கலைஞர் துணிவுடன் தான் வெளியிட்ட அறிவிப்பைப் பாராட்டியதாகவே கூறுகிறார்.

தமிழ் வழிபாட்டு மொழியாக அரசாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு திருவண்ணாமலை கோயிலுக்கு அமைச்சராக பார்வையிட சென்றபோது அர்ச்சகர் வடமொழி மந்திரங்களை உச்சரித்தபோது கோபத்தின் உச்சிக்குச் சென்ற அமைச்சர் கண்ணப்பன், 'நிறுத்து வடமொழியை' என்று கூறியிருக்கிறார். அச்சத்தில் உழன்ற அர்ச்சகர் தமிழில் வழிபாடு நடத்த தடுமாறியபோது, மாவட்ட ஆட்சித் தலைவரே அர்ச்சகராகி தமிழில் வழிபாடுகளை அமைச்சர் முன்னிலையில் நடத்தியிருக்கிறார்.

அனைத்து ஜாதியினரும் ஆகமக் கோயில்களில் அர்ச்சகராகும் வகையில் அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் வந்தபோது (15.4.1974) அறநிலையத் துறை அமைச்சராக இருந்த பெருமை மு. கண்ணப்பனுக்கு உண்டு. அதேபோல் கோயில் அறங்காவலர் பதவிகளில் கட்டாயமாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் பிரதிநிதி இடம் பெற வேண்டும் என்று தி.மு.க. ஆட்சியில் சட்டமியற்றியபோதும் அந்தத் துறையின் அமைச்சராக இவர் தான் இருந்தார். தஞ்சை கோயிலைக் கட்டிய இராஜராஜசோழன் சிலையை கோயிலுக்குள் வைக்க மத்திய தொல்பொருள் துறை அனுமதி மறுத்த நிலையில் இராஜராஜன் சிலையை கோயிலுக்கு வெளியே நிறுவி நடுவண் அரசின் அதிகாரத்துக்கு எதிர்ப்புக் காட்ட முதல்வர் கலைஞர் முடிவெடுத்தார். அப்போதும் அறநிலையத் துறை அமைச்சராக இருந்தவர் மு. கண்ணப்பன். அந்த விழாவுக்கும் அவரே ஏற்பாடுகளைச் செய்தார்.

4ஆம் பக்கம்)

# மோடி ஆட்சி – கருத்தாளர்களையும் ஒடுக்குகிறது
# ஓராண்டு காலம் சிறையில் வாடும் புரட்சிகர சிந்தனையாளர்கள்

***புரட்சிகர சிந்தனையாளர்கள் எழுத்தாளர்களை நகர்ப்புற தீவிரவாதிகள் என்று முத்திரைக் குத்தி ஓராண்டு காலமாக சிறையில் அடைத்து வைத்துள்ளது மோடி ஆட்சி. ஹிட்லர் ஆட்சியில் நடந்த அதே அடக்குமுறைகள் அப்படியே பின்பற்றப்படுகின்றன.***

“புனே அருகே பீமா-கோரேகான் பகுதியில் மாவோயிஸ்ட்கள் வன்முறைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். புலனாய்வு செய்ததில் பிரதமர் நரேந்திர மோடியை கொலை செய்ய ஒரு திட்டம் தீட்டப்பட்டிருப்பது தெரிய வந்தது. பீமா-கோரேகான் வழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் இருவருக்கு பிரதமரைக் கொலை செய்யும் முயற்சியில் பங்கிருக்கிறது,” இப்படி சொல்கிறது காவல் துறை.

புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தின் மூத்த நிர்வாகியான வரவர ராவ் உள்ளிட்ட 9 செயல்பாட்டாளர்கள், கடந்த ஓராண்டு காலமாக சிறையில் இருக்கிறார்கள்.

பேஷ்வா பார்ப்பனர்களுக்கு எதிராக தலித்துகள் பெற்ற வெற்றியின் 200வது ஆண்டு கொண்டாட்டம் 2018 ஜனவரி 1ஆம் தேதி புனே அருகே உள்ள பீமா-கோரேகானில் நடைபெற்றபோது வன்முறை வெடித்தது. அதில் ஒருவர் மரணம் அடைந்தார். காவல் துறையினர் உள்பட மக்கள் சிலரும் காயமடைந்தனர்.

ஆரம்பத்தில் வன்முறையைத் தூண்டியதாக இந்து அமைப்புகளின் பிரதிநிதிகளான சம்பாஜி பிடே மற்றும் மிலிந்த் எக்போடே மீது வழக்கு தொடரப்பட்டது. மிலிந்த் எக்போடே கைது செய்யப்பட்டு, பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். சம்பாஜு பிடே இன்னும் தலைமறைவாக உள்ளார்.

பின்னர் புரட்சிகர சிறுத்தைகள் ஜாட்டிய அனாட்சியின் (ஆர்.பி.) தலைவர் சுதிரா தவாலே, நாக்பூரைச் சேர்ந்த மனித உரிமைகள் வழக்கறிஞர் சுரேந்திர காட்லிங், டெல்லியைச் சேர்ந்த செயல்பாட்டாளர்கள் ரோனா வில்சன், நாக்பூர் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஷோமா சென், பி.எம்.ஆர்.டி.எப். முன்னாள் உறுப்பினர் மகேஷ் ராவுத் ஆகியோரை 2018 ஜூன் மாதம் முதலாவது வாரத்தில் புனே காவல் துறையினர் மும்பை, நாக்பூர் மற்றும் டெல்லியில் கைது செய்தனர்.

அவர்கள் நகர்ப்புறங்களில் மாவோயிஸ்ட் அமைப்புகளின் உயர்நிலை நிர்வாகிகளாக இருந்தார்கள் என்று காவல் துறை தரப்பில் சொல்லப்படுகிறது. அவர்களுடைய வீடுகளில் சோதனை நடத்தியபோது மின்னணு சாதனங்கள், கணினி டிஸ்க்குகள், ஆவணங்களைப் பறிமுதல் செய்ததாகவும் அவற்றை புனே தடயவியல் ஆய்வகத்துக்கு அனுப்பி உள்ளதாகவும், ஆய்வகத்தில் இருந்து அந்தப் பொருட்களின் கண்ணாடி பிம்பங்களை சேகரித்திருப்பதாகவும் காவல் துறையினர் கூறுகின்றனர்.

ஆவணங்களை ஆய்வு செய்ததில், ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதைப் போல பிரதமர் நரேந்திர மோடியை கொலை செய்ய மாவோயிஸ்ட்கள் சதித் திட்டம் தீட்டியிருந்ததை நாங்கள் கண்டுபிடித்தோம் என்றும் காவல் துறை கூறுகிறது. இந்த ஆதாரத்தின் அடிப்படையில் தான் மேற்படி ஐந்து பேரையும் கைது செய்ததாகக் காவல் துறையினர் குறிப்பிடுகின்றனர்.

அதன்பிறகு, செயல்பாட்டாளர்கள், வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்டோரின் வீடுகளில் மகாராஷ்டிர காவல் துறையினர் சோதனைகள் நடத்தினர். புரட்சிகர எழுத்தாளர் சங்க நிர்வாகி பெண்டியலா வரவர ராவ் வீட்டிலும் சோதனை நடந்தது. ஹைதராபாத்தில் வரவர ராவ் கைது செய்யப்பட்டு, அவரை காவல் துறையினர் புனேவுக்கு அழைத்துச் சென்றனர்.

வரவர ராவ் உள்ளிட்ட 5 பேர் 2018 ஆகஸ்ட்டில் கைது செய்யப்பட்டனர்.

அதே நாள் வழக்கறிஞரும், மனித உரிமை செயல்பாட்டாளருமான சுதா பரத்வாஜ், சிவில் உரிமைகள் செயல்பாட்டாளர் கவுதம் நவ்லங்கா, சுதிரா தவாலேவுக்காக வழக்கில் ஆஜரான வழக்கறிஞர் மற்றும் உரிமைப் போராளி அருண் பெரைரா, எழுத்தாளரும் உரிமை செயல்பாட்டாளருமான வெர்னான் கோன்சால்வ்ஸ் ஆகியோர் வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டனர்.

**பிபிசியிடம் பேசிய வரவர ராவின் மனைவி ஹேமலதா, “விசாரணையில் எந்த முன்னேற்றமும் இல்லை. ஜாமீன் மனுக்கள் மீது 6 மாதங்களாக வாதங்கள் நடைபெற்று வருகின்றன. ஜாமீன் மனு மீது தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், நீதிபதி இடமாற்றம் செய்யப்பட்டார். புதிய நீதிபதி விசாரணையை மீண்டும் நடத்த விரும்புகிறார்”.**

ஐந்து செயல்பாட்டாளர்கள் கைதுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அக்டோபர் 25 ஆம் தேதி வரை அவர்களை அவரவர் வீடுகளில் வைத்திருக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. பிறகு கவுதம் நவ்லங்காவுக்கு வீட்டுக் காவலில் இருந்து ஜாமீன் அளிக்கப்பட்டபோது, மீதி நான்கு பேரையும் 2018 நவம்பரில் காவல் துறையினர் கைது செய்தனர்.

பல விஷயங்களில் அவர்கள் பிரதமர் மோடிக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். அவர்களில் அருண் பெரைராவும், வரவரராவும் ஏற்கெனவே மாவோயிஸ்ட் அனுதாபிகள் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலித் பேராசிரியர் ஆனந்த் டெல்ட்டும்ப்டேவும் 2019 பிப்ரவரியில் கைது செய்யப்பட்டார். இருந்த போதிலும், அது சட்டவிரோதமான நடவடிக்கை என்று புனே நீதிமன்றம் அதை ரத்து செய்துவிட்டது.

வரவர ராவின் மனைவி ஹேமலதா 2019 ஏப்ரலில் இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு எழுதிய கடிதத்தில் வரவர ராவை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

2018 தொடக்கத்தில் கைது செய்யப்பட்ட சுரேந்திர காட்லிங்க், ஷோம சென், சுதிர் தவாலே, மகேஷ் வாவுத், ரோனா வில்சன் ஆகியோரும், 2018 ஆகஸ்ட்டில் கைது செய்யப்பட்ட வரவர ராவ், சுதா பரத்வாஜ், சுதிர் தவாலே, அருண் பெரைரா, வெர்னான் கோன் சால்வஸ் ஆகியோரும், முழுமையாக ஓராண்டு முடிந்துவிட்ட நிலையிலும் புனே எரவாடா சிறையில் இன்னும் விசாரணைக் கைதிகளாக உள்ளனர்.

இந்த வழக்கில் காவல் துறையினர் குற்றப் பத்திரிகையை 2018 நவம்பரில் தாக்கல் செய்தனர். இணைப்பு குற்றப் பத்திரிகையை 2019 பிப்ரவரியில் தாக்கல் செய்தனர். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு 10 மாதங்களாகிவிட்டன. இருந்தாலும், வழக்கில் அதிக முன்னேற்றம் நடக்கவில்லை. அவர்களுடைய ஜாமீன் மனுக்கள் இன்னும் நிலுவையில் உள்ளன.

பிபிசியிடம் பேசிய வரவர ராவின் மனைவி ஹேமலதா, “விசாரணையில் எந்த முன்னேற்றமும் இல்லை. ஜாமீன் மனுக்கள் மீது 6 மாதங்களாக வாதங்கள் நடைபெற்று வருகின்றன. ஜாமீன் மனு மீது தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், நீதிபதி இடமாற்றம் செய்யப்பட்டார். புதிய நீதிபதி விசாரணையை மீண்டும் நடத்த விரும்புகிறார்,” என்று கூறினார்.

“நாங்கள் உயர் நீதிமன்றத்தை அணுகினால், விசாரணை நீதிமன்றம் ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கிறார்கள். விசாரணை நீதிமன்றம் ஜாமீன் வழங்க மறுத்தால் நாங்கள் உயர் நீதிமன்றத்தை நாடலாம். இருந்தாலும் விசாரணை நீதிமன்றம் ஜாமீன் மனுவை நிராகரிக்கவோ அல்லது ஜாமீன் வழங்கவோ இல்லை. அங்கே தாமதிக்கப்படுகிறது. விசாரணை நடவடிக்கையில் முன்னேற்றம் காணவோ அல்லது ஜாமீன் வழங்கவோ இல்லை” என்று வேதனையுடன் குறிப்பிட்டார் ஹேமலதா.

இதுவரை 10 நீதிமன்ற விசாரணைகள் முடிந்துள்ளன. ஒரு வாக்குமூலம் கூட இன்னும் பதிவு செய்யப்படவில்லை என்று அவர் கூறினார். “இந்த மனுவைக் காரணம் காட்டி ஜாமீன் மனு மீது உத்தரவு பிறப்பிப்பதை அவர்கள் தாமதம் செய்கிறார்கள். அந்த நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராக உள்ள சிவாஜி பவார், இந்த வழக்கில் இன்னும் 290 விசாரணைகள் உள்ளதாகக் கூறினார்” என்று ஹேமலதா தெரிவித்தார்.

இதுமட்டுமின்றி தொடர்பில்லாத வழக்குகளிலும் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வழக்குகளிலும், அவர்கள் பொய்யாக சேர்த்து வருகிறார்கள். “கண்ணிவெடிகள் புதைத்தார்கள் என்று சட்டீஸ்கரில் ஆஹிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல கர்நாடகாவிலும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜாமீன் வழங்கினாலும் கூட அவர் சிறையிலேயே இருக்க வேண்டும் என்பதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபடுகிறார்கள்” என்று ஹேமலதா குற்றம்சாட்டினார்.

“இந்திய தலைமை நீதிபதிக்கு நான் ஒரு கடிதம் எழுதியுள்ளேன். அதற்கு எந்தப் பதிலும் வரவில்லை. தெலங்கானா முதல்வருக்கு நான் கடிதம் எழுதினேன். அதற்கு எந்தப் பதிலும் வரவில்லை. அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டிருந்த காலத்தில் மகாராஷ்டிர (முன்னாள்) ஆளுநர் வித்யாசாகர் ராவும், வரவராவும் ஒரே சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அவருக்கும் நாங்கள் கடிதம் எழுதினோம். அவர் அதை வெறுமனே முதல்வர் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்து விட்டார். அவ்வளவுதான். அதற்கு மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை,” என்று சோகத்துடன் கூறினார் ஹேமலதா.

“கடந்த ஓராண்டு காலம் மிகவும் சிரமமானதாக இருக்கிறது. வரவர ராவ் கடந்த காலத்தை தாங்கிக் கொள்ளும் மனநிலையில் இல்லை. வயதும் ஆரோக்கியமும் ஒத்துழைக்காது. சட்டீஸ்கர் பயணம் காரணமாக 20 ஆண்டுகளுக்குப் பிறகு அவருக்கு மீண்டும் மூலநோய் ஏற்பட்டுள்ளது. அதனால் அவருக்கு அதிக உதிரப் போக்கு ஏற்பட்டுள்ளது” என்று அவர் தெரிவித்தார்.

“ஷோமா சென் மூட்டுவலியால் அவதிப்படுகிறார். ஆனால் அந்தப் பெண்மணிக்கு கட்டில் எதுவும் தரப்படவில்லை. வரவர ராவுக்கு கட்டில் மற்றும் நாற்காலி கூட அளிக்கப்படவில்லை. கடந்த 10 ஆண்டுகளாக சிறை சென்றிருக்கிறார். ஆனால் எங்களுக்கு இவ்வளவு மோசமாக நடத்தப்பட்டதில்லை. சுரேந்திர காட்லிங் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு இதயத்தின் ரத்தக் குழாயில் ஸ்டென்ட் வைக்கப்பட்டுள்ளது” என்றும் ஹேமலதா தெரிவித்தார்.

பத்து நாட்களுக்கு முன்பு புனேவுக்கு சென்றதாகவும், அங்கு நிலைமை நன்றாக இல்லை என்றும் அவர் கூறினார். “புனே சிறையில் கட்டுப்பாடுகள் விநோதமாக உள்ளன. சிறையில் அவரை நான் சந்திக்க வேண்டும் என்றால், நான் அவருடைய மனைவி என்று ஹைதராபாத் காவல் துறையினரிடம் இருந்து சான்றிதழ் பெற்று வர வேண்டும் என்கிறார்கள். அவருடைய பெயரை தன் பெயரின் பிற்பகுதியில் சேர்த்திருப்பவர்கள் மட்டுமே அவரைச் சந்திக்க அனுமதிக்கப்படுகிறார்கள். எனது மகள்கள் திருமணத்திற்குப் பிறகு பிற்பாதி பெயரை மாற்றிக் கொள்ளவில்லை. எனவே அவரை சந்திக்க அவர்களுக்கு அனுமதி தருகிறார்கள். மகன்கள் வழியிலான பேரக் குழந்தைகள் சிறைவாசிகளைச் சந்திக்க அனுமதிக்கிறார்கள். மகள்கள் வழியிலான பேரக் குழந்தைகளுக்கு அனுமதி கிடையாது. எங்களுக்கு மகன்கள் கிடையாது. என் மகள்களின் பிள்ளைகள் அவரைச் சந்திக்க அவர்கள் அனுமதிப்பதில்லை” என்று ஹேமலதா தெரிவித்தார்.

“கைது செய்யப்பட்டவர்களில் ஒருவருடைய மனைவி, தன்னுடைய பெயரை அதிகாரப்பூர்வமாக மாற்றிக் கொள்ளவில்லை. எனவே தனது கணவரை சந்திக்க அவருக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, நாங்கள் சார்ந்துள்ள கோஷ்டி எது என்று படிவத்தில் பூர்த்தி செய்து தர வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார்கள். கோஷ்டி (gang) என்ற ஒரு பகுதி அந்தப் படிவத்தில் இருக்கிறது. அவர்கள் எந்த கோஷ்டி அல்லது கும்பலையும் சேர்ந்தவர்கள் அல்ல, அரசியல் கைதிகள் என்று நான் அவர்களிடம் சொன்னேன். ஆனால், அவர்களுக்குப் புரியவில்லை. எனவே நான் அந்த இடத்தில் புரட்சிகர எழுத்தாளர்கள் சங்கம் என்று எழுதிக் கொடுத்தேன்” என்றார் ஹேமலதா. ●

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## ‘குரூப் 2’ தேர்வுகளில் உருவாக்கிய தமிழக அரசு மாற்றம் சரியா?

# கிராமப்புற மாணவர்களை பயற்சிக் கல்லூரி நோக்கி துரத்துகிறது

‘குரூப் 2’ தேர்வுக்கு தமிழ் வினாத்தாள் நீக்கப்பட்டதற்கு கடும் எதிர்ப்பு எழுந்தது. வினாத்தாள் நீக்கப்பட்டாலும் தமிழ்ப் பாடத்துக்கான தேர்வு இடம் பெற்றுள்ளது என்றும் ஆழமான தமிழ் அறிவு உள்ளவர்கள் மட்டுமே தேர்வு எழுத முடியும் என்றும் தமிழ்நாடு அரசு தேர்வு ஆணையம் விளக்கம் தந்துள்ளது.

சரி... புதிய பாடத் திட்டம் என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வருகிறது...? மொழித் தாளுக்கு என்று தனியே கேள்வித் தாள் இருக்கப் போவது இல்லை. தமிழ், ஆங்கிலம் ஆகிய 2 மொழிகளுக்குமே இந்த நிலைதான்.

ஆனால், தமிழ் தெரியாதவர்கள் தேர்வு எழுதுவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை என்று தேர்வாணையம் கூறுகிறது. இது, ஒருபக்க உண்மை மட்டுமே. தமிழ் மொழித் தாளில் நன்றாக எழுதினால், தேர்ச்சி பெறுவது எளிது என்கிற தற்போதைய நடைமுறை இனி இருக்காது. இனி தமிழில் அவ்வளவு எளிதாக தேர்ச்சி பெற முடியாது இதனால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகப் போவது, அநேகமாக, தமிழ் வழிப் பயின்ற கிராமத்து இளைஞர்கள்தாம். இதுதான், மறுபக்க உண்மை.

இவ்விரு உண்மைகளையும் சமன் செய்து பார்த்து, பாடத் திட்ட மாற்றம் குறித்த தீர்ப்புக்கு வருவதுதான் நியாயம் ஆகும். பயிற்சி மையங்கள், நகர்ப்புற மாணவர்கள், ஏற்கெனவே அரசுப் பணியில் இருக்கிற ஒருவரின் அன்றாட வழிகாட்டுதல் பெறக்கூடிய ‘வசதி’ கொண்டவர்கள், புதிய மாற்றத்தால் பெரிதும் பலன் அடையலாம்.

முதல் தலைமுறைப் பட்டதாரிகள், கிராமத்து எல்லைகளைத் தாண்டிச் செல்லாதவர்கள், கோரிக்கை மனுக்களுடன் அரசு அலுவலக வாசற் கதவுகளில் கால்கடுக்க மணிக்கணக்கில் காத்துக்கிடக்கிற சாமான்யர்களின் பிள் ளைகள், கடும் சவாலை எதிர்கொள்ள நேரிடலாம். இது, மாற்றம் அன்று; மிகப் பெரிய ஏமாற்றம்.

பொது அறிவு (முதல் நிலைத்தேர்வு) - 10 அலகுகள் கொண்டுள்ளது.

பொது அறிவியல் பகுதியில், சுற்றுச் சூழல் மற்றும் சூழலியல் - கடைசி இடம் பிடித்து இருக்கிறது.

இந்தியாவின் புவியியல் - போக்குவரத்து - தகவல் தொடர்பு; சமூகப் புவியியல் - குறிப்பாக, இனம், மொழிக் குழுக்கள் மற்றும் முக்கியப் பழங்குடிகள்; இயற்கைப் பேரிடர் - பேரிடர் மேலாண்மை, பருவநிலை மாற்றம் - பசுமை ஆற்றல் பயனுள்ள பல தலைப்புகள் உள்ளன.

இந்தியாவின் வரலாறும் பண்பாடும் - தமிழகத்தின் வரலாறு மரபு பண்பாடு மற்றும் சமூக இயக்கங்கள் தேர்வுக்கான பாடத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

திருக்குறள் - மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

முதன்மைத் தேர்விலும் இந்தப் பாடங்களே இடம் பெற்றுள்ளன. ஆனால் கடுமையான ‘சுமைகள்’ மாணவர்கள் தலையில் ஏற்றப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம். கவனிக்கவும் - வெறுமனே ‘நிர்வாகம்’ அன்று; ‘வளர்ச்சி நிர்வாகம்!’ என்று ஒரு தலைப்பு - ‘தமிழகத்தில் மின்னாளுகை!’ குறித்து ஒரு தலைப்பு.

இடையே, நடப்பு நிகழ்வுகள், ஆட்சியியல் பகுதியில், பொது விழிப்புணர்வு, பொது நிர்வாகம், நலன்சார் அரசுத் திட்டங்கள் போன்ற தலைப்புகளில் தமிழ்த் தேர்வு எழுத வேண்டும். இவை முறையான பள்ளிப்பாடத்தை விட்டு விலகி நிற்பவை. கிராமப்புற சாமான்ய இளைஞர்களுக்கு இது பெரும் சுமை.

இந்திய ஆட்சியியல் - லோக் ஆயுக்தா, தகவல் உரிமை, நுகர்வோர் பாதுகாப்பு உரிமைகள், மனித உரிமைகள் சாசனம் ஆகியனவும் அடங்கும். ஆனால் இவை எல்லாம், எமது கிராமப்புற இளைஞர்களுக்கு ‘அறிமுகம்’’ ஆகாதவை.

‘விரிவான எழுத்துத் தேர்வு’ பகுதியின் தொடக்கமே அதிர்ச்சி தருகிறது. ‘தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு மொழி பெயர்த்தல்’, ‘ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல்’ எந்த வகையில் கிராமத்து இளைஞர்களுக்கு சாதகமான பகுதியாக இருக்கும்?

தமிழகத்தில், தமிழக அரசுப் பணியில் சேர, ஆங்கில மொழிபெயர்ப்புத் திறன் என்ன அத்தனை அடிப்படைத் தகுதியா?

தப்பும் தவறுமாக ஆங்கிலம் பேசு வதும் எழுவதும் தண்டனைக்கு உரிய குற்றமா என்ன...? பக்கத்தில் ஒரு தமிழ் - ஆங்கில அகராதி வைத்துக் கொண்டால் போகிறது. தேர்வின் போது, அகராதி தரப்படுமா..? இல்லைதானே...? பிறகு...? நம்முடைய பார்வையில், தமி ழக அரசுப் பணிக்கான போட்டித் தேர் வில், ஆங்கிலப் புலமை மிகவும் அத்தியா வசியம் ஆகிறது. ஒருவகையில், தமிழ் இளைஞர்கள் மீது ஆங்கிலம் திணிக்கப் படுகிறது. நம்முடைய கிராமத்து இளைஞர்கள் இதனால் எவ்வளவு தடைகளை சந்திப்பார்கள்?

ஏற்கெனவே தனியாக இருந்த மொழித்தாளையே தக்க வைத்து இருக்கலாம். அல்லது தரமானதாக நடைமுறைக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்து இருக்கலாம். மொழி அறிவு, அதிலும் ‘உள்ளூர் மொழி’ மாநில அரசுப் பணிகளில் மிக முக்கிய இடம் வகித்தாக வேண்டும். மாறாக, ‘உள்ளூர் அரசியல்’ அந்த இடத்தைப் பிடித்து இருக்கிறது.

‘உள்ளூர் மொழியில் உலக அறிவு’ என்கிற இலக்கை நோக்கி நகர்ந்து இருக்க வேண்டிய ஆணையம், ‘உலக மொழியில் உள்ளூர் அரசியல்’ திசையில் பயணித்து இருக்கிறது.

கேள்வித் தாள் தயாரிப்பு இனி முக்கிய பங்கு வகிக்க இருக்கிறது. பயிற்சி மையங்களின் தேவை அதிகரிக் கும்போல்தான் தோன்றுகிறது. காரணம், சுயமாகத் தாமே வீட்டில் இருந்தபடி டி.என்.பி.எஸ்.சி. தேர்வுக்குத் தயார் செய்து கொள்ளும் இளைஞர்களை ஊக்குவிப்பதாக மாற்றப்பட்ட பாடத் திட்டம் இல்லை. ‘வழிகாட்டுதல்’ தேவைப் படும் பகுதிகள், முதல் நிலை, முதன்மைத் தேர்வுகளில் அதிகம் உள்ளன. இது, ஆரோக்கியமான மாற்றம் இல்லை.

புதிய பாடத் திட்டம் சொல்லும் செய்தி....?

‘வடிகட்டுகிற’ பணிதான் ஆணையத் தேர்வுகளின் பிரதான நோக்கம். ‘தேர்வு செய்வது’ அல்ல.

**– கல்வியாளர்**

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

1975இல் அவசர நிலையை பிரதமர் இந்திரா காந்தி அறிவித்தார், தி.மு.க.வைக் கடுமையாக ஒடுக்கப் பட்டது. ஆட்சியும் கலைக்கப் பட்டது. நெருக்கடியான அக்கால கட்டத்தில் கலைஞரின் கார் ஓட்டியாக செயல்பட கண்ணப்பன் முன் வந்தார். அமைச்சர் பதவியில் இருந்தாலும் தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கும் தலைமைக்கும் என்றும் கட்டுப்பட்டவன் என்ற உயர்ந்த கொள்கை உணர்வை வெளிப்படுத்திய நிகழ்வு இது. கலைஞர் இதை உளம் திறந்து பாராட்டினார். அடுத்த 15ஆவது நாளிலேயே மு. கண்ணப்பன் மீது ‘மிசா’ சட்டம் பாய்ந்தது. இப்படி ஏராளமான வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியிருக்கிறது இந்த நூல்.

‘மு. கண்ணப்பன - வாழ்வும் பணியும்’ என்ற தலைப்பில் இந்த நூல் வந்திருந்தாலும் திராவிட இயக்கத்தின் வரலாற்றுக்கு முன்னுரிமை தரப்பட்டிருப்பது இந்த நூலின் சிறப்பாகும். திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் அதில் இணைத்துக் கொண்ட செயலூக்கமுள்ள தோழர்களின் எளிமை - போர்க் குணம் - வரலாற்றை அறிதலிலும் - வாசிப்பதிலும் தோழர்கள் காட்டிய தீவிர ஈடுபாடுகளை இந்த நூலை வாசிக்கும் போது உணர முடிகிறது.

தலைவர்கள் - நாடுகளின் பார்வை யில் எழுதப்படும் வரலாறுகளைவிட களப் பணியாளர்களையும் அவர்கள் செயல்பட்ட பகுதியையும் முன் வைத்து எழுதப்படும் வரலாறுகளே சரியான சமூகச் சூழலை பிரதிபலிக்கும். அதிகாரத்துக்கு வந்த ஒரு அரசியல் கட்சி, அதன் தொடக்கக் காலங்களில் நடத்திய கொள்கைப் பயணங்களையும் இலட்சிய உறுதி களையும் ஒரு போதும் மறந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கையும இந்த நூலின் பக்கங்களில் புதைந்து கிடக்கிறது.

மு. கண்ணப்பன் அரசியல் பயணத்தின் நிகழ்வுகளை - அதன் வரலாற்றுப் பின்புலத்தோடு விளக்குவதில் நூலாசிரியர் ஒ. சுந்தரம் கவனம் செலுத்தியிருப்பது பாராட்டுக் குரியது.

**– இரா**

வெளியீடு :
சிவகாமி பதிப்பகம்,
பொள்ளாச்சி
பக். : 336; விலை : ரூ. 200
தொடர்புக்கு :
9087979431 / 04259-227420

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

## பரமக்குடியில் இமானுவேல் சேகரனார் பிறந்த நாள்



09.10.2019 அன்று ஜாதி ஒழிப்பு போராளி தியாகி இமானுவேல் சேகரன் பிறந்த நாளை யொட்டி பரமக்குடி யிலுள்ள இமானுவேல் சேகரன் நினைவிடத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தியாகி இமானுவேல் பேரவைப் பொதுச் செயலாளர் சந்திர போஸ் ஆகியோர் காலை 10:30 மணிக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

உடன் திராவிடர் விடுதலைக் கழக மதுரை மாவட்டச் செயலாளர் மணி அமுதன், மேலூர் பொறுப்பாளர் சத்யமூர்த்தி, ஆய்வு மாணவர் மாளவிகா, பொன்னான்டி உள்ளிட்ட மதுரை மாவட்டக் கழகத் தோழர்கள் மற்றும் தியாகி இமானுவேல் பேரவை மாநில, மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மாலை 5 மணிக்கு தியாகி இமானுவேல் பேரவை மானாமதுரையில் ஏற்பாடு செய்திருந்த ‘ஜாதி ஒழிப்பு கருத்தரங்’ கிற்கு தியாகி இமானுவேல் பேரவைப் பொதுச் செயலாளர் சந்திர போஸ் தலைமை தாங்கினார். தமிழ்த் தேச மக்கள் முன்னணித் தலைவர் மீ.த.பாண்டியன், தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் கே.எம்.ஷெரீப், கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 24th october 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN